## கரும்பு ஆராய்ச்சி நிறுவகம் - 2016

கரும்பு ஆராய்ச்சி நிறுவகத்தின் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக்கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(1) பிரிவு மற்றும் 1981 இன் 75 ஆம் இலக்க கரும்பு ஆராய்ச்சி அதிகாரச்சட்டத்தின் 19(3) ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் நிறுவகத்தின் ஆண்டறிக்கையுடன் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இவ்வறிக்கையில் காணப்படுகின்றன.

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்த நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். என்னால் உயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச கணக்காய்வு நியமங்களுக்கு ஒத்ததாக (ISSAI 1000-1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்க நெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ்கூற்றுக்கள் அற்றன என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கும் கணக்காய்வு திட்டமிடப்பட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான நடைமுறைகள் கணக்காய்வில் உள்ளடங்கும். மோசடி அல்லது தவறுகள் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய போதியளவு தவறான கூற்றுக்களினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் நிறுவகத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி நிறுவகத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காகவல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்தச் சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) ஆம் மற்றும் (4) ஆம் உபபிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும் பரப்பையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டேன் என நான் நம்புகிறேன்.

**1.4 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

**2. நிதிக்கூற்றுக்கள்**

**2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து கரும்பு ஆராய்ச்சி நிறுவகத்தின் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

**2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

**2.2.1 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 03 இன் பிரகாரம் கொடுக்கல் வாங்கலொன்று, சம்பவமொன்று தொடர்பில் பயன்படுத்தப்படுகின்ற குறித்த இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் ஒன்று இல்லாதவிடத்து முகாமைத்துவத்தினால் பொருத்தமான கணக்கீட்டுக் கொள்கையொன்று நிர்ணயிக்கப்பட்டு வெளிப்படுத்தப்பட வேண்டியிருந்த போதிலும், ரூபா 252,695 தொகையான உயிரியல் விஞ்ஞான சொத்துக்களின் கணக்கீடு தொடர்பாக நிறுவகம் பின்பற்றுகின்ற கணக்கீட்டுக் கொள்கை வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 08 இன் பிரகாரம் நிறுவகம் தொடர்பாக உள்ள இரண்டு வழக்குகளின் தற்போதைய நிலையினைக் ஆராய்ந்துபார்த்து நிதிநிலைமைக் கூற்றுத் திகதியில் உள்ளவாறு காணப்படுகின்ற நிகழத்தக்க பொறுப்புக்களுக்காக ஒதுக்கீடுகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

**2.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2013 ஆம் ஆண்டின் போது பிழையாக கணக்கு வைக்கப்பட்ட கந்தளாய் சீனி கம்பனியிலிருந்து அறவிட வேண்டிய கடனுக்கான வட்டித் தொகையான ரூபா 385,333 மீளாய்வாண்டின் போதும் சரி செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஆ) நிர்மாண நடவடிக்கைகள் முடிவடைந்த ரூபா 250,000 பெறுமதியான கட்டிடத்தை மூலதனமாக்குவதற்கு நடவடிக்கை எடுக்காது 4 வருட அளவிலான காலமாக நடைமுறை வேலையின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்தது.

(இ) கொழும்பு அலுவலகத்திற்காகச் செலுத்தப்பட்ட 2 மாத பாதுகாப்பு வைப்பு ரூபா 300,000 தொகை செலவினமொன்றாகக் கணக்கீடு செய்யப்பட்டமையின் காரணமாக ஆண்டின் செலவினம் அந்த அளவால் அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்ததுடன் பெறவேண்டிய பாதுகாப்பு வைப்பு அப் பெறுமானத்தால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஈ) மீளாய்வாண்டின் போது அமைச்சிலிருந்து உபகரணங்களைக் கொள்வனவு செய்வதற்காகக் கிடைத்த ரூபா 50,000,000 தொகையான மூலதன மானியம் வருமானமாகக் கணக்கீடு செய்யப்பட்டமையின் காரணமாக அப்பெறுமானத்தால் ஆண்டின் மிகை அதிகரித்தும் மூலதன மானியம் குறைத்தும் கணக்குகளில் காண்பிக்கப்பட்டிருந்தது.

### 2.3 பெறவேண்டிய கணக்குகள்

செவனகல சீனிக் கைத்தொழில் நிறுவனத்திடமிருந்து கிடைக்க வேண்டிய ரூபா 1,164,231 தொகையும் லங்கா சீனி தனியார் கம்பனியிடமிருந்து கிடைக்க வேண்டிய ரூபா 172,834 தொகையும் 05 வருட காலமாகவும் மற்றும் 05 வருடங்களுக்கு மேற்பட்ட பழைய கந்தளாய் சீனிக் கம்பனியிலிருந்து பெறவேண்டிய ரூபா 1,000,000 தொகையையும் அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடன் இணங்காமை

பின்வரும் சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமைகள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமை |
|---|---|
| (அ) 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ 12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை | |
| (i) 9.12 ஆம் பந்தி | ஏதாவதொரு நலன்புரி நிகழ்ச்சித்திட்டத்தை அமுல்படுத்தும் போது பொதுத் திறைசேரியின் அங்கீகாரம் பெறப்பட்ட வேண்டியிருந்த போதிலும், நிறுவனத்தால் அவ்வாறு அங்கீகாரம் பெறப்படாமல் ஊழியர்களிடமிருந்து வைத்தியப் பட்டியல்களை மீளளிப்புச் செய்வதற்காக மீளாய்வாண்டின் போது ரூபா 11,346,000 செலவினம் மேற்கொள்ளப்பட்டிருந்தது. |
| (ii) 9.14.2 ஆம் பந்தி | நிறுவகத்தின் செயற்பாடுகளை மேற்கொள்வதற்காக தயாரிக்கப்பட்டு பயன்படுத்தப்படுகின்ற சட்டவிதிக் கோவைகளுக்காக (செயல் ஒழுங்கமைப்புக் கோவை) பொது முயற்சிகள் திணைக்களத்தின் அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை. |

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், மீளாய்வாண்டின் நிதி விளைவுகள் ரூபா 88,198,790 மிகையாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மிகை ரூபா 56,438,274 ஆனமையால் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டின் நிதி விளைவுகளில் ரூபா 31,760,516 அதிகரிப்பாக இருந்தது. செயற்பாட்டு வருமானம் ரூபா 33,706,755 இனால் அதிகரித்தமை மேற்கூறப்பட்ட அதிகரிப்பிற்கு காரணமாக இருந்தது.

மீளாய்வாண்டினதும் கடந்த நான்கு ஆண்டுகளினதும் நிதி விளைவுகளை பகுப்பாய்வு செய்த போது 2012 மற்றும் 2013 ஆம் ஆண்டுகளில் பற்றாக்குறையொன்று ஏற்பட்டிருந்த போதிலும், 2014, 2015 மற்றும் 2016 ஆம் ஆண்டுகளில் மிகையொன்று ஏற்பட்டிருந்தது. எவ்வாறாயினும் நிதி விளைவுகளில் ஊழியர் ஊதியம், நிலையான சொத்துக்களுக்கான பெறுமானத்தேய்வு மற்றும் அரசாங்கத்திற்குச் செலுத்திய வரி என்பவற்றை மீளச் சீராக்கும் போது 2012 ஆம் ஆண்டில் ரூபா 105,963,090 ஆகக் காணப்பட்ட நிறுவகத்தின் பங்களிப்பு மீளாய்வாண்டளவில் ரூபா 312,417,371 ஆக இருந்தது.

### 3.2 நிறுவகத்திற்கு எதிராக அல்லது நிறுவகத்தினால் ஆரம்பிக்கப்பட்டுள்ள சட்ட விடயங்கள்

சேவையிலிருந்து விலக்குதல் மற்றும் சேவையை முடிவுறுத்தல் என்பவற்றின் காரணமாக இரண்டு நபர்களினால் நிறுவகத்திடமிருந்து நட்டஈடு கோரி நிறுவகத்திற்கு எதிராக 02 வழக்குகள் தொடரப்பட்டிருந்தன.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

1981 இன் 75 ஆம் இலக்க கரும்பு ஆராய்ச்சி நிறுவக அதிகாரச்சட்டத்தின் பிரகாரம் நிறுவகத்தின் நோக்கமாக கரும்பு பயிர்ச் செய்கை மற்றும் உற்பத்தி தொடர்பான ஆராய்ச்சிகளை மேற்கொள்வதாக இருந்த போதிலும், கரும்புக் கைத்தொழிலை அபிவிருத்தி செய்வதற்காகவும் புதிய கரும்பு நாற்றுக்களை அறிமுகப்படுத்தல், பயிர்ச் செய்கை நடவடிக்கைகளுக்காக உரங்களை சிபாரிசு செய்து வழங்குதல், கிருமித்தாக்கம் மற்றும் நோய்த்தடுப்பு, விவசாயத்தை இயந்திரமயப்படுத்துவதற்காக தேவையான இயந்திர பொறிமுகளை அறிமுகப்படுத்துதல் போன்ற பணிகளும் நிறைவேற்றப்படுகின்றது.

(அ) பொருத்தமான கரும்பு வகைகளை அறிமுகப்படுத்துதல், நோய்க் கட்டுப்பாடு, கரும்புப் பயிர்ச் செய்கை முறை மற்றும் சீனி தயாரித்தல் சதவீதத்தை அதிகரித்துக் கொள்வதற்கு தேவையான முறையை அறிமுகப்படுத்துதல் மந்தகதியில் காணப்பட்டமையின் காரணமாக, கரும்பு ஆராய்ச்சி நிறுவகம் தாபிக்கப்பட்டு தற்போது 33 வருடங்கள் அளவிலான காலம் கடந்திருந்த போதிலும், மொத்த சீனித் தேவையில் உள்நாட்டு சீனி உற்பத்தி 9 சதவீத அளவிலான குறைந்த அளவினைக் கொண்டிருந்தது.

(ஆ) கரும்பு விளைச்சலை சேகரிக்கும் போது காணப்படுகின்ற ஊழிய வழங்கலின் பற்றாக்குறைக்குத் தீர்வொன்றாக நவீன தொழில்நுட்பத்தின் பிரகாரம் உற்பத்தி இயந்திரப் பொறிமுறை அறிமுகப்படுத்துதல் மற்றும் அவற்றைப் பயன்படுத்துதல் தொடர்பாக விவசாயிகளுக்கு அறிவூட்டுவதன் மூலம் தரமான கரும்பு விளைச்சலொன்றைப் பெற்றுக்கொள்வதற்காக போதியளவான பங்களிப்பொன்றைப் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) மீளாய்வாண்டின் இறுதியில் 100 சதவீத பௌதீக செயல்முன்னேற்றமொன்று எதிர்பார்க்கப்பட்ட 19 ஆராய்ச்சி செயற்திட்டங்களில் 17 ஆராய்ச்சி செயற்திட்டங்கள் அடையப் பெற்ற பௌதீக செயல்முன்னேற்றம் 5 சதவீதம் முதல் 75 சதவீதம் வரையான குறைந்த மட்டத்தைக் கொண்டிருந்தன. அவ்வாறே CI/9/16 - Preliminary evaluation of Sugarcane varieties மற்றும் PT/03/16 Testing sugarcane varieties for jiggery production என்ற இரண்டு செயற்திட்டங்களின் பௌதீக செயல்முன்னேற்றம் இரண்டு செயற்திட்டங்களில் பௌதீக செய்முன்னேற்றம் காணப்படவில்லை.

(ஈ) தெனியாய என்சால்வத்தேயில் 5.4 ஹெக்டேயர் கந்தளாயில் 200 ஹெக்டேயர் மற்றும் கிளிநொச்சியில் 12 ஹெக்டேயர் காணிகளின் சட்டரீதியான உரித்தைக் கையேற்காமல் ஆராய்ச்சி நிறுவகத்தால் பல வருட காலமாக அந்தக் காணிகளில் கரும்பு நாற்றுமேடை மற்றும் ஆராய்ச்சி காணிகளில் கரும்பு நாற்றுமேடை மற்றும் ஆராய்ச்சி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுக் கொண்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் போது ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக ரூபா 20,350,242 தொகை செலவிடப்பட்டிருந்தது. எனினும் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் கிளிநொச்சி காணியில் 8 ஏக்கரும் கந்தளாயில் 35 ஹெக்டேயர் காணியிலும் மாத்திரம் பயிரிடப்பட்டிருந்தது.

## 4.2 முகாமைத்துவ செயற்பாடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நிறுவகத்திற்குச் சொந்தமான கட்டிடமொன்று வெளித்தரப்பினருக்கு சிற்றுண்டிச்சாலைலொன்றை நடாத்திச் செல்வதற்காக 2004 ஆம் ஆண்டு முதல் வாடகை அடிப்படையில் வழங்கப்பட்டிருந்ததுடன் அதற்காக வருடாந்தம் கேள்வி கோரப்படாமல் இரண்டு வருடங்களுக்கு ஒரு தடவை கேள்வி கோரப்பட்டிருந்தது. மேலும், இந்த சிற்றுண்டிச்சாலையில் பயன்படுத்தப்படுகின்ற தண்ணீருக்கான கட்டணமும் நிறுவனத்தால் அறவிடப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 1981 இன் 75 ஆம் இலக்க கரும்பு ஆராய்ச்சி அதிகாரச்சட்டத்தின் 18 ஆவது பிரிவின் பிரகாரம் உள்நாட்டு சீன உற்பத்தி நிறுவனத்தால் உற்பத்தி செய்யப்பட்ட சீனியின் அளவின் அடிப்படையில் செஸ் வரியொன்று அறவிட வேண்டியிருந்த போதிலும், கல்ஓய சீனித் தொழிற்சாலையிலிருந்து ரூபா 1,077,100 தொகையான செஸ்வரி அறவிடப்பட்டிருக்கவில்லை.

(இ) நிறுவகத்தின் குழாமுக்குரியதாக 27 வாகனங்கள் காணப்பட்டதுடன் அந்த வாகனங்களில் 04 வாகனங்கள் ஓடுவதற்கு தகுதியான நிலையில் காணப்படாதிருந்தமை அறிவிக்கப்பட்டிருந்த போதிலும், அவற்றை விற்றுத் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 4.3 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்

2000 ஆம் ஆண்டின் போது கரும்பு ஆராய்ச்சி நிறுவனத்தினால் உரிய தேவையொன்று இன்றி டிபென்டர் வாகனமொன்று கொள்வனவு செய்யப்பட்டிருந்ததுடன் 2010 ஆம் ஆண்டின் போது அந்த வாகனத்தை பழுதுபார்த்தல் பயனற்றதாக இருந்தமையால் அதனை விற்பனை செய்வதற்கு பொறியியலாளரால் சிபாரிசு செய்யப்பட்டிருக்கும் போது 2010 ஆம் ஆண்டு முதல் 2016 ஆம் ஆண்டு வரை ரூபா 3,035,070 அதிக செலவினமொன்றைச் செலவிட்டு இந்த வாகனம் பழுதுபார்க்கப்பட்டிருந்தது.

### 4.4 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

கொழும்பு அலுவலகத்திற்காக ரூபா 85,000 மாதாந்த வாடகையில் முன்னைய ஆண்டில் பயன்படுத்திய கட்டிடத்திற்குப் பதிலாக கட்டிடமொன்றைப் பெற்றுக் கொள்வதற்குரிய பத்திரிகை அறிவித்தலின் பிரகாரம் 2,000 சதுர அடிக்கும் 3,000 சதுர அடிக்கும் இடையிலான அளவில் கட்டிடமொன்று தேவையாக இருந்தமை காண்பிக்கப்பட்டிருந்த போதிலும், அதற்கு முரணானதாக 5,000 சதுர அடிக் கட்டிடமொன்று மாதாந்தம் ரூபா 150,000 வாடகையில் பெறப்பட்டு அதற்காக வருடாந்த வாடகையும் 02 மாத பாதுகாப்பு வைப்புமாக மீளாய்வாண்டின் போது ரூபா 2,100,000 தொகையொன்று வாடகை உடன்படிக்கை கைச்சாத்திடுவதற்கு முன்னர் ஒரே தடவையில் செலுத்தப்பட்டிருந்தது.

### 4.5 பதவியணியினர் நிர்வாகம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நிறுவகத்தின் அங்கீகரிக்கப்பட்ட பதவியிணியினர் எண்ணிக்கை 193 ஆகவும் உள்ளபடியான பதவியணியினர் எண்ணிக்கை 176 ஆகவும் இருந்தமையால் 13 பதவிகளுக்காக 17 வெற்றிடங்கள் காணப்பட்டன.

(ஆ) பிரதான ஆராய்ச்சி உத்தியோகத்தர், பிரதான தொழில்நுட்ப சமிக்ஞை உத்தியோகத்தர், சிரேஷ்ட ஆராய்ச்சி உத்தியோகத்தர், சிரேஷ்ட தொழில்நுட்ப சமிக்ஞை உத்தியோகத்தர், தொழில்நுட்ப உத்தியோகத்தர் போன்ற பதவிகளில் வெற்றிடங்கள் காணப்பட்டமை நிறுவகத்தின் அடிப்படை நோக்கமான ஆராய்ச்சி நடவடிக்கைகளை வெற்றிகரமாக மேற்கொள்வதற்கு தடையாக இருந்தது.

## 5. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுக் குறைபாடுகள் தொடர்பாக அவ்வப்போது நிறுவனத்தின் தலைவரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுத் துறைகளில் விசேட கவனம் தேவைப்படுகின்றது.

| | முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகள் | அவதானிப்புக்கள் |
|---|---|---|
| (அ) | பதவியணியினர் நிர்வாகம் | நிறுவகத்தின் நிர்வாக நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக தேவையான பதவியணியினர் கட்டமைப்புக் கோவை அங்கீகரிக்கப்படாமை |
| (ஆ) | வருமானம் சேகரித்தல் | சரியான தகவல்களைப் பெற்று செஸ் வருமானம் கணிப்பிடுவதற்கு நடவடிக்கை எடுக்காமை |
| (இ) | கடன் பணத்தை அறவிடல் | நீண்டகாலமாக அறவிடப்படாமல் காணப்படுகின்ற பெறவேண்டிய மீதிகளை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்காமை |